சார்பு நீதிமன்றம், பெருந்துறை, ஈரோடு மாவட்டம்

முன்னிலை : திரு.பா.சரவணன், பி.எஸ்.சி.,பி.எல்.,
சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| O.S.No.5/2015 |
| DW1- *சுப்ரமணியன்* |
| 07.01.2021 |

1969 ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

குறுக்கு விசாரணை *தொடர்ச்சி:*

*வாசாஆ3படி கிரையம் வாங்கியபோது அ தாவது 1.8.2007 முதல் 31.3.2012 வரை அந்த சொத்தின் ஒரு ஏக்கரின் வழிகாட்டிமதிப்பு ரூ.1,90,692/— என்றால் சரிதான். அதன்பிறகு 1.4.2012 முதல் 8.6.2017 வரை தாவாச்சொத்தின் ஒரு ஏக்கர் வழிகாட்டி மதிப்பு ரூ.12 லட்சம் என்றால் சரிதான். 31.1.1974 அன்று வெங்கடாசலத்தின் பாகத்தை என் அம்மா பெயரில் வாங்கினேன் என்றால் சரிதான். அதற்கான கிரையப்பத்திரம் என்னிடம் காட்டப்படுவதுதான். அது வாசாஆ12. வாசாஆ12ல் கண்ட சொத்துக்கள் வாசாஆ1 பாகக்கறார்படி பி செட்யூலாக வெங்கடாசலத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வாசாஆ12ன்படி வெங்கடாசலம் தனக்காகவும், தனது மைனர் மகன் நல்லசிவத்திற்காகவும் எழுதிகொடுத்துள்ளார். மைனர் நல்லசிவத்தை வாசாஆ12ல் தரப்பினராக சேர்க்கவேண்டிய அவசியம் அவருக்கும் பூர்விகசொத்தில் பாத்தியம் என்பதால்தான் என்றால் சரியல்ல. பிறகு ஏன் மைனர் நல்லசிவம் வாசாஆ12ல் தரப்பினராக காட்டப்பட்டார் என்றால் பொதுவாக ஒருவருக்கு ஆண்மகன் இருந்தால் அவசியமில்லை என்றாலும் அவரையும் தரப்பினராக சேர்ப்பார்கள். மேற்படி விவரத்தை வாசாஆ12ல் கண்டு எழுதவில்லை என்றால் எனக்கு தெரியாது. மீண்டும் கூறுகிறார். அந்த விவரம் எழுதவில்லை. வாசாஆ12ல் அந்த சொத்து வெங்கடாசலத்திற்கு பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டதென்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ1ல் கிணறு, கிணற்றை சுற்றியுள்ள காலியிடம்,துளை,வாரி வாய்க்கால்,தடம் ஆகியவை 3 பாகஸ்தர்களுக்கும் பொது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனிச்சாமிக்கு மேற்படி கிணறு அதை சுற்றியுள்ள காலியிடம் பாதை,துளை,வாரி ஆகியவை பழனிசாமிக்கு தனித்து பாத்தியம் என்று நான் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. ஆதியில் மாடு*

வைத்து இறைத்தபோது வாரி,வாய்க்காலுக்கு அதிக இடம் தேவைப்பட்டது. பின்னிட்டு மோட்டார் வைத்தபிறகு அந்த இடத்தை பழனிசாமிக்கு எனது தந்தை மற்றும் வெங்கடாசலம் விட்டுகொடுத்துவிட்டார்கள். இந்த விவரத்தை எதிர்வழக்குரையிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ, மற்றொரு வழக்கின் வழக்குரையிலோ சொல்லவில்லை. இந்த விவரத்தை கேட்கவில்லை. அதனால் சொல்லவில்லை. வாசாஆ2ன் அசலை 24.2.2012 தேதியில் கிரையம் வாங்கும்போதே பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். என்னிடம்ட காட்டப்படும் ஒப்பந்தத்தின் நகல் நானும் பழனிசாமியும் செய்து கொண்டதாகும். அது வாசாஆ13. அதை முந்தைய வழக்கில் தாக்கல் செய்திருந்தேன். வாசாஆ13ல் கண்ட நான்கெல்லையும் வாசாஆ3ல் கண்ட நான்கெல்லையும் ஒன்றுதான் என்றால் சரிதான். ஒரே எல்லைக்குள் இருப்பதில் ஒரு பகுதியை கிரையமாக கொடுத்தார். மீதி பகுதியை கிரைய ஒப்பந்தமாக கொடுத்தார். 24.2.2012 தேதியில் ஒரு பகுதியையும், வாசாஆ13 5.1.2012ல் 2வது பகுதி என்று குறிப்பிட்டு சொல்லாததற்கு காரணம் உள்ளதா? என்றால் கிரையம் எழுதும்போது மாாக்கெட் மதிப்பும், வழிகாட்டி மதிப்பும் குறைவாக இருந்தது. அவருக்கு பணம் குறைவாக தேவைப்பட்டது. அதனால்தான் 2வது பகுதி என்று குறிப்பிட்டு எழுதவில்லை. நான் சொல்லும் காரணம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ8 முந்தைய வழக்கின் வழக்குரை என்றால் சரிதான். அதில் சொல்லியுள்ள விவரம் சரிதான். வாசாஆ13 பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். வாசாஆ8ல் வாசாஆ13ல் குறிப்பிட்ட சொத்தை அந்த ஒப்பந்த தேதியிலேயே சுவாதீனம் ஒப்படைத்ததாக கூறியுள்ளேன்.

(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Uploded by

SS